Puducherry / Regional Bulletin / Tamil /18.10 Hrs. / 31.01.2025 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 31.01.2025 - வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

சமூக பொருளாதார மற்றும் அரசியல் **ஸ்திரத்தன்மை**யின் தூணாக இந்தியா மேம்பட்டு வருவதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கூறியுள்ளார்.

குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை, **விக்சித் பாரத்** என்னும் இலக்கை நோக்கிய இந்தியாவின் பாதைக்கான **அடிப்படை வரையறை**யாக அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான **மத்திய பட்ஜெட்டை**, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நாளை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

புதுச்சேரியில்**, சட்டப் பேரவைக் கூட்டத்தொடர்**, வரும் 12ஆம் தேதி கூட உள்ளது.

***குடியரசுத் தலைவர் -1 (17)***

உலக அளவில் ஸ்திரத்தன்மை இல்லாத நிலையிலும் இந்தியா, மற்ற நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக திகழும் வகையில், சமூக பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின் தூணாக மேம்பட்டு வருவதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்க நாளான இன்று, இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், 2047ஆம் ஆண்டிற்குள் இந்தியா முன்னேறிய, வலுவான நாடாக திகழ்வதை, வருங்கால சந்ததியினர் காண முடியும் என்றார். மத்திய அரசு நாட்டு மக்களின் நலனுக்காக, மாற்றம், சீர்திருத்தம், செயல்பாடு என்ற அடிப்படையில், முன் எப்போதும் இல்லாத வேகத்தில் செயல் பட்டு வருவதாகவும், 10 ஆண்டுகளுக்கு முன்னர், 2 லட்சம் கோடி ரூபாயாக மட்டுமே இருந்த, மூலதனச் செலவுகளுக்கான

பட்ஜெட் நிதி, 11 இலட்சம் கோடி ரூபாயாக சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்திற்கு, அரசு 70 ஆயிரம் கோடி ரூபாய் அனுமதித்து இருப்பதாகவும், நாட்டில் மொத்தமுள்ள மெட்ரோ ரயில் பாதைகளின் நீளம், ஆயிரம் கிலோமீட்டரை தாண்டி இருப்பதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார். கடந்த 6 மாதங்களில் 17 புதிய வந்தே பாரத் ரயில்களும், ஒரு நமோ எக்ஸ்பிரஸ் ரயிலும், பயன்பாட்டிற்கு வந்து இருப்பதாக அவர் கூறினார்.

***குடியரசுத் தலைவர் -2 (15)***

**இந்தியாவில் தயாரிப்போம்** திட்டம், **உலகிற்காக தயாரிப்போம்** திட்டமாக மேம்படுவதால், பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகள் உருவாகி வருவதாக தெரிவித்த அவர், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில், சுயசார்புடன் கூடிய நவீன வேளாண் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகக் கூறினார்.

தேசிய கல்விக் கொள்கையின் கீழ், கல்விக்கான **நவீன கட்டமைப்பு வசதிகள்** மாணவர்களுக்கு வழங்கப் படுவதாகவும், **பெண்கள் தலைமையிலான வளர்ச்சி** என்பதன் ஒரு பகுதியாக நியமிக்கப் பட்ட, **டிஜிட்டல் பணப் பட்டுவாடாத் தோழி**கள், **அனைவருக்கும் நிதி வசதி** என்னும் இலக்கை எட்டுவதில் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த, வரலாற்று சிறப்புவாய்ந்த பல முக்கிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு உள்ளதாக, குடியரசுத் தலைவர் கூறினார். ஒரே நாடு – ஒரே தேர்தல், வக்ஃபு திருத்தச் சட்டம் உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகளிலும், துரிதமான முன்னேற்றம் எட்டப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

***மோடி கருத்து (11)***

குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை, விக்சித் பாரத் என்னும் இலக்கை நோக்கிய இந்தியாவின் பாதைக்கான அடிப்படை வரையறையாகவே திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பல்வேறு துறைகளில் அரசு மேற்கொண்டு வரும் முன் முயற்சிகளையும், முழுமையான வளர்ச்சி மற்றும் வருங்கால வளர்ச்சியின் அவசியத்தையும், குடியரசுத் தலைவர் தமது உரையில் கோடிட்டு காட்டி இருப்பதாக, சமூக ஊடகத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார். செழிப்பான வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்புகளை இளைஞர்களுக்கு வழங்கும் நாடாக இந்தியாவை மேம்படுத்தும் தொலைநோக்குப் பார்வையும், ஒற்றுமை மற்றும் மன உறுதியுடன் இலக்குகளை எட்டுவதற்கான வழிமுறைகளுமே, குடியரசுத் தலைவர் உரையின் முக்கிய உள்ளடக்கம் என்று அவர் கூறியுள்ளார்.

***பொருளாதார ஆய்வறிக்கை (12)***

நாடாளுமன்றத்தில் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், இன்று தாக்கல் செய்த பொருளாதார ஆய்வறிக்கையில், நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 6.4 சதவிகிதம் வளரும் என மதிப்பிடப் பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் சேவைத் துறைகளின் ஆதரவுடன் இந்திய பொருளாதாரம் நிலையாக வளர்ச்சி அடைந்து வருவதாக, நிதியமைச்சர் தெரிவித்தார். உலக அளவிலான சந்தைத் தேவை குறைந்ததால், உற்பத்தித் துறை சில நெருக்கடிகளுக்கு ஆளான போதிலும், தனியார் நுகர்வு வலுவாகவே நீடிப்பதாகவும், காரீஃப் பருவத்தில் வேளாண் உற்பத்தி அதிகரிப்பதால், ஊரகப் பகுதிகளில் சந்தைத் தேவை அதிகரிக்கும் என்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நாளை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

***புதுச்சேரி சட்டமன்றம் (6)***

புதுச்சேரியில் சட்டப் பேரவைக் கூட்டத்தொடர், வரும் 12ஆம் தேதி கூட உள்ளது. 15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின், 5ஆவது கூட்டத்தொடரில் இரண்டாம் பகுதி, 12ஆம் தேதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு, சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள பேரவைக் கூடத்தில் கூடும் என சட்டப் பேரவைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். சட்டப் பேரவைச் செயலர் திரு. தயாளன், இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் இதைத் தெரிவித்துள்ளார்.

*பட்ஜெட் எதிர்பார்ப்பு -1 (15)*

புதுச்சேரியை மாநிலமாக அங்கீகரித்து, மத்திய நிதி ஆணையத்திலும், மாநிலங்களுக்கான 16ஆவது நிதிக் குழுவிலும் சேர்க்க வேண்டும் என, புதுச்சேரி அரசு, மத்திய அரசிடம் கோரியுள்ளது. ஜெய்சால்மரில் கடந்த மாதம் நடைபெற்ற, மத்திய பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில், தாம் இதை வலியுறுத்தியதாக, மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், பட்ஜெட் எதிர்பார்ப்புகள் குறித்து இன்று புதுச்சேரியில், எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். மற்ற மாநிலங்களைப் போல புதுச்சேரிக்கும் ஆண்டுக்கு 10 சதவிகிதம் கூடுதல் நிதி ஒதுக்கவும், புதுச்சேரிக்கு என, சிறப்பு நிதியாக ஆயிரத்து 243 கோடி ரூபாய் வழங்கவும் தாங்கள் கோரி இருப்பதாக அவர் கூறினார். சுற்றுலா வளர்ச்சியில், உலகிலேயே 2ஆம் இடத்தில் உள்ள புதுச்சேரியில், சுற்றுலாத் துறையின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்க, மத்திய பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கவும், பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில், வலியுறுத்தப் பட்டதாக, அவர் தெரிவித்தார். அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் மேலும் கூறுகையில்…

**(வாய்ஸ்)**

*பட்ஜெட் எதிர்பார்ப்பு -2 (10)*

மத்திய பட்ஜெட் தொடர்பான எதிர்பார்ப்புகள் குறித்து, புச்சேரி வர்த்தக சபையின் துணைத் தலைவர் திரு. L.P. ரவி, எமது செய்தியாளரிடம் பேசுகையில், புதுச்சேரியில் வர்த்தக மையம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றார். ECR ரயில் பாதை திட்டத்திற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி நிறைவேற்றினால், புதுச்சேரியின் பொருளாதாரம் மேம்படும் என்று அவர் தெரிவித்தார். அதிகபட்ச GST வரியை 28-லிருந்து, 18ஆக குறைக்க வேண்டும் என்றும், மருத்துவ காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் பெறப்படும் காப்பீட்டுத் தொகை மீதான சுமார் 18 சதவிகித GST வரியை ரத்து செய்ய வேண்டும் என்றும் திரு. ரவி கோரினார். அவர் மேலும் கூறுகையில்…

**(வாய்ஸ்)**

*வானிலை – போட்டி (13)*

மாணவர்கள் இடையே, வானிலை மற்றும் கால நிலை அறிவியல் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கத்துடன், தெற்காசிய வானிலை சங்கத்துடன் இணைந்து, இந்திய வானிலை சங்கம் நடத்திய, வானிலை ஒலிம்பியாட் போட்டியில், தேசிய அளவில் 3ஆம் இடம் பெற்ற, புதுச்சேரி அமலோற்பவம் லூர்து அகாடமி பள்ளியின் 8ஆம் வகுப்பு மாணவி M. கிருஷ்கா-விற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப் பட்டது. மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற இதே பள்ளியைச் சேர்ந்த 9 மாணவர்கள், புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டனர். தேசிய அளவிலான இறுதிச் சுற்றில், 3ஆம் இடம் பெற்று, பள்ளிக்கும் , புதுச்சேரிக்கும் பெருமை சேர்த்த மாணவி கிருஷ்கா, எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்...

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி நியமனம் (12)*

புதுச்சேரி அரசின் பொதுப் பணித் துறையில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வரும், 112 பல்நோக்கு ஊழியர்களில் 61 பேருக்கு பணி ஆய்வாளர் பணிக்கும், 51 பேருக்கு மெக்கானிக் பணிக்கும், பதவி உயர்வு அளித்து, அதற்கான ஆணைகளை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார். சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், தலைமை பொறியாளர் டாக்டர் தீனதயாளன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இன்று வழங்கப் பட்டுள்ள 112 பதவி உயர்வுகளும் சேர்த்து, கடந்த 2021ஆம் ஆண்டு முதல் இதுவரை, பொதுப்பணித் துறையில் 462 பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப் பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அமைச்சர் அலுவலகம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*இராணுவம் ஆள்சேர்ப்பு (13)*

காஞ்சிபுரத்தில், அக்னிவீர் பணியிடங்கள், சிப்பாய் மற்றும் நர்சிங் உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான இராணுவ ஆள் சேர்ப்பு முகாம், பிப்ரவரி 5 முதல் 15ஆம் தேதி வரை, பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்க, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் இருந்து, அவரவர் தகுதிக்கு ஏற்ப தேர்வர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், இவர்கள், இராணுவ ஆள் சேர்ப்பு இணையதளத்தில் உள்ளபடி உரிய ஆவணங்களை எடுத்து வந்து, தங்களுக்கு உரிய தேதி மற்றும் நேரத்தில், இம்முகாமில் கலந்து கொள்ளலாம் என்றும், சென்னையில் உள்ள இராணுவ ஆள் சேர்ப்பு அலுவலகம் அறிவித்துள்ளது. ஆள் சேர்ப்பு நடைமுறைகள் முற்றிலும் தானியங்கி முறையில், வெளிப்படையாகவும், நியாயமாகவும் நடைபெறும் என்றும், இராணுவத்தில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறும் மோசடி பேர்வழிகளை நம்ப வேண்டாம் என்றும், ஆள் சேர்ப்பு அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

சமூக பொருளாதார மற்றும் அரசியல் **ஸ்திரத்தன்மை**யின் தூணாக இந்தியா மேம்பட்டு வருவதாக, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கூறியுள்ளார்.

குடியரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை, **விக்சித் பாரத்** என்னும் இலக்கை நோக்கிய இந்தியாவின் பாதைக்கான **அடிப்படை வரையறை**யாக அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான **மத்திய பட்ஜெட்டை**, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நாளை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

புதுச்சேரியில்**, சட்டப் பேரவைக் கூட்டத்தொடர்**, வரும் 12ஆம் தேதி கூட உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK**